# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## நிலையறி பரீட்சை 2021
## தரம் 11

| தரம் :- 11 | வரலாறு II<br>History II | நேரம் :-<br>3மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண்:............................... | 33 T II | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம |

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

- பகுதி I இன் வினா இலக்கம் **ஒன்று** கட்டாயமானது
- பகுதி II இல் இருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

1) (அ)

i.கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

மாணிக்ககங்கை, கன்னொருவ, கந்தரோடை, கசாதொட்ட, சீகிரியா, யாப்பகுவ,பதிராஜவெல,மின்னேரியாவாவி, களுகங்கை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக்கோட்டை, பொம்பரிப்பு, உடரஞ்சாமடம.

(12 புள்ளிகள்)

ii.கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படப்பகுதியில் குறித்துப் பெயரிடுக.

மும்பாய்,பிரான்ஸ், மலாக்காநீரிணை, வத்திக்கான், பத்தேவியா, பாரசீகவளைகுடா, (6புள்ளிகள்)

(ஆ)

i.கீழே A,B,C,D எனத்தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. கி.பி 1764 இல் கண்டி இராச்சியத்தினை ஆக்கிரமித்த ஒல்லாந்த ஆளுநர்.
B. இந்தியாவுக்கு வருகை தந்து மொகலாயப்பேரரசின் மாமன்னன் ஜஹங்கீருடன் பேச்சுவார்த்தை நடத்திய கப்பல் குழுவின் தலைவர்
C. மிருகங்களை எவரும் கொல்லக்கூடாது என முதன்முதல் சட்டம் இயற்றிய மன்னன்
D. வசப மன்னன் காலத்தில் ரிஷிகிரி அமைச்சரினால் நாகதீப ஆட்சி செய்யப்பட்டதனை குறிப்பிடும் மூலாதாரம். (4புள்ளிகள்)



A



B

❖ A,B ஆகிய படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.1. படம் A இல் காட்டப்பட்டிருக்கும் நிர்மாணிப்பின் பெயர் என்ன?

2. இதனைநிர்மாணித்த மன்னன் யார்?

3. இது அமைந்து காணப்படும் இராசதானி எது?

4. இதில் செல்வாக்குச் செலுத்திய கலைமரபு யாது? (4புள்ளிகள்)

iii. 1. படம் B இல் காட்டப்பட்டிருப்பவரின் பெயர் என்ன?

2. இவர் வசித்து வந்த விகாரை எது?

3. இவர் தலைமை தாங்கிய பிரசித்தமான விவாதம் நடைபெற்ற இடம் எது?

4. இவ்விவாத விபரங்கள் அடங்கியநூல் ஒன்றை வாசித்ததன்மூலம் பௌத்தம் பற்றிய தெளிவைப் பெற்று இலங்கைக்கு வந்த நபர் யார்? (4புள்ளிகள்)

## பகுதி II(B)

2)

i. இலங்கை பற்றிய தகவல்களைத்தரும் தென்னிந்திய இலக்கிய மூலாதாரங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

ii. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று இலங்கை பற்றி எழுதியுள்ள ஐரோப்பிய நாட்டவர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii. இராசரட்டைக்கால வரலாற்றை அறிய உதவும் பௌத்த சமய நூல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. ( 2புள்ளிகள்)

iv. புராதன சிதைவுகள் மூலம் அறிந்து கொள்ளக் கூடிய **இரண்டு** விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

v. வரலாற்றைக் கட்டி எழுப்புவதில் கல்வெட்டுக்கள் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தினை **மூன்று** காரணிகளின் துணையுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

3)

i. இலங்கையில் இரணைமடுப்படிவுகள் நிலத்தினுள் புதைந்துள்ளதாக கருதப்படும் சிறு வெப்பமான காலப்பகுதி எது? (1புள்ளி)

ii. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் பற்றிய தகவல் கிடைத்துள்ள தாழ்நில உலர்வலய குகை வசிப்பிடங்கள் **இரண்டினைக்**குறிப்பிடுக. ( 2புள்ளிகள்)

iii. (A)வரலாற்றுக்கு முற்பட்டகாலமனிதர்களின் உடலமைப்பின் சிறப்பு அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(B)வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதர்களின் எலும்புக் கூடுகள் கண்டறியப்பட்ட வசிப்பிடங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iv. ஆரம்பவரலாற்றுக்காலத்தில் கிராமங்களை நிர்வகித்த “கமிக” வின் பணிகளை **இரண்டு** காரணிகளின் ஊடாக விளக்குக. (5 புள்ளிகள்)

v. வரலாற்றுக்காலத்தில் நடைமுறையில் இருந்த பொருளாதார அமைப்பில் கைத்தொழில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளிகள்)

4)

i. பின்வரும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளை அண்மித்து அமைந்திருந்த நிர்வாக மையங்களை ஒழுங்கு முறையில் எழுதுக. (3 புள்ளிகள்)

A- கிருந்தி ஓயா,B- மகாவலி கங்கை ,C- மல்வத்து ஓயா,

ii. பின்வரும் A தொடக்கம் D வரையான கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A. மானாகட்டிய என்ற பெயரினை உடைய குளத்தினைக்கட்டிய மன்னன்
B. குளக்கட்டுநீரினால் அரிக்கப்படுவதை தடுப்பதற்காக அணைக்கட்டின் உட்புறத்தில் கற்கள் பதித்து உருவாக்கிய அமைப்பு
C. தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட புகழ்மிக்க நீர்ப்பாசனக்கால்வாய்.
D. குட்டகண்ண திஸ்ஸ மன்னனால் அமைக்கப்பட்டதாக கருதப்படும் பூங்கா

(மகாசேனன், வசபன், கலிங்கல் அலைதாங்கி, அங்கமடில்ல, ஜயகங்கை , மகாமேகவனம், பத்மஸ்வர) (4 புள்ளிகள்)

iii. இலங்கையில் பண்டையகாலத்தில் வைத்திய முறையும், சுகாதாரசேவையும், சிறப்பான நிலையில் இருந்துள்ளது என்பதனை அலாஹனபிரிவெனா அகழ்வினை ஆதாரமாகக் கொண்டு **இரு**காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

iv. பொலநறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக.

5)

i. கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த நாயக்கர் வம்ச ஆட்சியாளர்கள் **மூவரைக்**குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கண்டி இராச்சிய காலப்பகுதியில் பின்வரும் A,B,C,D என்ற செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.(4 புள்ளிகள்)

A. பிரதானிகளின் கட்டளைகள்,செய்திகளை பிராந்திய நிர்வாக அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்.
B. இரண்டாவது பிரதமபிரதானி அழைக்கப்பட்ட பெயர்
C. தலதாமாளிகையின் புனிததந்ததாதுவுக்கு பொறுப்பான அதிகாரி
D. அரச மாளிகைக்கு உணவு, குடிபானங்களை வழங்கியவர்

(பத்வடநிலமே, லியனரால, பல்லேகம்மா, கஜநாயக்கநிலமே, தியவடநிலமே, கடுபுள்ளே உடகம்பா, சலுவடநிலமே,)

iii. கண்டி இராச்சிய சமூக அமைப்பில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக.(5 புள்ளிகள்)

iv. கண்டி இராச்சியகாலத்தில் பின்வரும் இரு செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறைகளை விளக்குக.

(A) பிரதேசநிர்வாகம் (B) நீதிமன்றச்செயற்பாடுகள்

(6 புள்ளிகள்)

6)

i. இந்து சமுத்திரத்தினைச் சேர்ந்த நாடுகளுடன் வர்த்தகப்போட்டியில் ஈடுபட்ட **மூன்று** ஐரோப்பிய நாடுகளைப் பெயரிடுக.(3 புள்ளிகள்)

ii. ராஜதிராஜசிங்கன் கண்டியை ஆட்சிசெய்யும் போது கண்டிக்கு வருகை தந்த ஆங்கிலேயநாட்டுத்தூதுவர்கள் **இருவரைக்** குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

iii. மியூறன் குழுவின் பரிந்துரைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

iv. போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் கைப்பற்ற முடியாமல்போன கண்டி இராச்சியத்தினை ஆங்கிலேயர் எளிதாகக்கைப்பற்றியமைக்கான **இரு** காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

v. (A) கி.பி 1848ஆம் ஆண்டின் சுதந்திரப்போராட்டத்துக்கு தலைமைதாங்கிய **இரு** தலைவர்களைக்குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(B) கி.பி.1848ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக.(4 புள்ளிகள்)

7)

i. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய அரசியல் யாப்புக்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து **A,B,C** ஒழுங்கில் எழுதுக. (3புள்ளிகள்)

A. சர்வஜனவாக்குரிமை இலங்கைக்கு வழங்கப்பட்டமை.

B. சட்டவாக்கக்கழகம், சட்டநிர்வாகக்கழகம் அமைக்கப்பட்டமை.

C. பிரதேசவாரிப்பிரதிநிதித்துவமுறை அறிமுகம் செய்யப்பட்டமை

(கோல்புறுக், டொனமூர், மனிங், குறூமக்கலம், சோல்பரி)

ii. (A) சோல்பரி அரசியல் யாப்பு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் ஏற்பட்டமாற்றங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

(B) சுதந்திரம் கோரிமேற்கொண்ட போராட்டங்களுக்கு பிரசார முறையாக சூரியமல் இயக்கத்தினைப் பயன்படுத்திய இடதுசாரித் தலைவர்கள் **இருவரைப்** பெயரிடுக. (2புள்ளிகள்)

iii. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மலையகப்பிரதேசங்களில் கோப்பிச் செய்கையின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.(5புள்ளிகள்)

iv. பிரித்தானியர் ஆட்சிகாரணமாக இந்நாட்டில் ஏற்பட்டசமூகமாற்றங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக.(6 புள்ளிகள்)

8)

i. மறுமலர்ச்சி என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? (1 புள்ளி)

ii. ஐரோப்பாவில் கல்வி மறுமலர்ச்சியினால் மாற்றத்துக்கு உள்ளான **இரு** துறைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii. கீழே A,B,C,D என்பனவற்றில் தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.(4 புள்ளிகள்)

A. புவியீர்ப்பு சக்தியைக் கண்டு பிடித்தவர்.

B. மனித உடலில் குருதிச்சுற்றோட்டம் தொடர்பில் முக்கியமான தகவலை வெளியிட்டவர்.

C. மேற்கு இந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்த நாடுகாண் பயணி

D. பிலிப்பைன்ஸ் நாட்டைக் கண்டுபிடித்த நாடுகாண் பயணி

(கலிலியோ கலிலி, ஐசாக் நியூட்டன், கபொட் சகோதரர்கள், பெர்டினன் மகலன், பெரசல்ஸ், வில்லியம் ஹார்வே)

iv. மறுமலர்ச்சிக்காலத்தில் அரசியல் துறையில் ஏற்பட்ட **இரு** மாற்றங்களைக் குறிப்பிட்டு விளக்குக.(5 புள்ளிகள்)

v. மறுமலர்ச்சி இலங்கையின்மீது ஏற்படுத்திய தாக்கத்தினால் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

(A)- அரசியல், (B)- பொருளாதாரம்(6 புள்ளிகள்)

9)

i. கைத்தொழிற்புரட்சி ஐரோப்பாவில் ஏற்பட்டமைக்கான பிரதான காரணம் யாது?(1 புள்ளி)

ii. 18ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நாடுகளை கைப்பற்றி பரவலானமுறையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட **இரண்டு** நாடுகளைக் குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

iii. கைத்தொழிற் புரட்சிக்காலத்தில் பின்வருபவர்களுடன் தொடர்புடைய கைத்தொழில் உற்பத்திகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக. (4 புள்ளிகள்)

A. ஜோன்கே

B. ஹென்றிகோட்

C. வில்லியம் சீமன்ஸ்

D. ரொபட் புல்டன்

( புகைப்படகு, ஜெனி நூல் நூற்கும் இயந்திரம், பறக்கும் நூனாளி, இரும்புக்கேபிள் கம்பிகள், மின் அடுப்பு, ரோலர் இயந்திரம்.) (4 புள்ளிகள்)

iv. கைத்தொழிற் புரட்சிக்காலத்தில் இங்கிலாந்தில் நிலக்கரிக்கைத்தொழில் முன்னேற்றம் கண்டதில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளை உதாரணத்துடன் விளக்குக. (5 புள்ளிகள்)


v. கைத்தொழிற்புரட்சியின் விளைவுகளினால் சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றினை விளக்குக. (6 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Province

நிலையறி பரீட்சை 2021
தரம் 11

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | வரலாறு II<br>**History II** | சுட்டெண்:................................ |

1.(அ) **(i)**



# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Province

நிலையறி பரீட்சை 2021
தரம் 11

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | வரலாறு II<br>**HistoryII** | சுட்டெண்:............................... |

**1.**(அ) **(ii)**

